பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 72

வியாழக்கிழமை
06 பெப்ரவரி 2025

தை 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## பலம்பெறும் எதிரணி

கொழும்பு, பெப். 6
பலமானதொரு எதிரணியைக் கட்டியெழுப்பி நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் கூட்டாகச் செயற்படுவது தொடர்பில் எதிர்க்கட்சிகளுக் ☞ 11

# தையிட்டிக் காணியை கையளிக்கமுடியாது

அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம்

யாழ். மாவட்டச் செயலருக்கு 'சண்டித்தனக்' கடிதம்

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 6**

**தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள காணி உட்பட 14 ஏக்கர் காணிகள் திஸ்ஸ விகாரைக்குச் சொந்தமானவை. அந்தக் காணிகளை ஒருபோதும் எவருக்கும் கையளிக்கமுடியாது. அதற்கான எந்தவொரு நடவடிக்கைக்கும் அனுமதிக்கமாட்டோம் என்று அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்குத் தெரியப்படுத்தியுள்ளது.** ☞ 11

## மணல் கடத்திய டிராக்டரை சுட்டுப் பிடித்தது பொலிஸ்



யாழ்ப்பாணம், பெப். 6
மணல் கடத்தலில் ஈடுபட்ட உழவியந்திரம் ஒன்று யாழ்ப்பாணப் பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம்–குருநகர் பொலிஸ் காவலரணில் இருந்த பொலிஸாராலேயே அந்த உழவியந்திரம் மடக்கிப்பிடிக்கப் ☞ 11

## அநுரவின் வெற்றிக்கு புலம்பெயரிகளே காரணம்

விமல் வீரவன்ஸ கண்டுபிடிப்பு



கொழும்பு, பெப். 6
கனடா உள்ளிட்ட நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்களின் தலையீட்டாலேயே வடக்கு மாகாணத்தை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் இயல்பாக வாக்குகள் கிடைத்திருக்கும் என நான் நம்பவில்லை. ஏனெனில் அங்குள்ள குடும்பங்களில் 90 சதவீதமானவற்றில் எவரேனும் ஒருவர் வெளிநாட்டில் இருப்பார். அவர்கள் ☞ 11

## யாழ்ப்பாணப் பல்கலையின் பட்டமளிப்பு மார்ச் மாதத்தில்

யாழ்ப்பாணம், பெப். 6
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 39ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா மார்ச் மாதம் 19ஆம், 20ஆம், 21 ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.
கலாநிதி, முதுமெய்யியல் மாணி, சைவசித்தாந்தத்தில் முதுமாணி, தமிழில் முதுமாணி, கலைமாணி உள்ளிட்ட 49 ☞ 11

யாழ்ப்பாணத்தில்

## டெங்கின் தாக்கம் 10 மடங்கு குறைவு

» 09

## அர்ச்சுனா எம்.பி.க்கு அர்ச்சனை மழை நேற்று!

கொழும்பு, பெப். 6
நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா ஒரு மனநோயாளி. அவரை மனநல மருத்துவரிடம் அனுப்பவேண்டும் என்று நாடாளுமன்ற ☞ 10

உதயன் உள்ளிட்ட

## ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் உடன் விசாரிக்கப்படவேண்டும்!

ரவிகரன் எம்.பி வலியுறுத்து

கொழும்பு, பெப். 6
உதயன் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகளுக்கு நீதி வேண்டும். இந்த ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் ☞ 09

## யாழ். ரயில் நிலையத்தில் 24 மணிநேர ஆசனப்பதிவு

யாழ்ப்பாணம், பெப். 6
யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்தில் நேற்றுமுதல் 24 மணிநேர ஆசன முற்பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன என்று ரயில் நிலைய அதிபர் தெரிவித் ☞ 09

## பெப்ரவரி 15 முதல் உத்தரதேவி ரயில்!

யாழ்ப்பாணம், பெப். 6
பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிமுதல் யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையில், உத்தரதேவி ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ☞ 09




'முற்றும் துறந்த புத்தருக்காக எங்கட முற்றங்களைப் பிடிக்கிறதுதான் அவையின்ர தர்மம் கண்டியளோ'

முல்லைத்தீவில்

## சிறுமியொருவர் துஷ்பிரயோகம்

முல்லைத்தீவு, பெப். 6
முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுமியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் ☞ 11

லசந்த கொலை வழக்கு

## சட்டமா அதிபரின் பரிந்துரையை அதிதீவிரமாக ஆராய்கின்றது அரசு

கொழும்பு, பெப். 6
ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கில், சந்தேகநபர்கள் மூவரை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ள விவகாரம் தொடர்பில் அரசாங்கம் அதி தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடை ☞ 10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 05.02.2025 | 3980 | I | 07 35 58 64 | விசேட எழுத்து: I |
| ஹந்தஹண ராசி சுப பலன் | 05.02.2025 | 1047 | | 09 16 18 50 | வெற்றி இலக்கினம்: ரிஷபம் |
| NLB ஜய | 05.02.2025 | 0006 | M | 2 1 8 7 | |
| மெகா பவர் | 05.02.2025 | 2086 | I | 45 65 74 78 | சுப்பர் இலக்கம்: 02 |
| மஹஜன சம்பத | 05.02.2025 | 5738 | L | 0 6 1 0 1 4 | |
| தன நிதானய | 05.02.2025 | 1768 | P | 04 14 28 31 | விசேட எழுத்து: P |
| அத சம்பத | 05.02.2025 | 313 | L | 1 0 1 4 | |

# மக்களைத் திசைதிருப்பும் செயற்பாட்டில் அநுர அரசு

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

**கொழும்பு,பெப்.6**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. மாறாக மக்களைத் திசைதிருப்பிவிடும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.**

இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்ட அவர், அதன்பின்னர் நடந்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது தேர்தல் காலத்தில் மாத்திரம் கொள்கைகளை வெளியிடாமல் உண்மையான கொள்கையுடன் செயற்படவேண்டும். தேர்தல் காலத்தில் முன்வைக்கும் கொள்கைகள் நாட்டின் அரசியலமைப்பு மற்றும் பொதுச்சட்டத்துக்கு இயை வானதாகக் காணப்பட வேண்டும். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு மாறாகச் செயற்படும் அரசியல்வாதிகளுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவர்களின் பதவிகள் பறிக்கப்படவேண்டும் என்ற பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம் -என்றார். (எ-33)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 05.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0446 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 3 2 9 0 9 3 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 05.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2712 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 06 15 60 69 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 05.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 46 50 69 72 |
| வெற்றி வாரம் | 4873 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 05.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| கும்பம் | |
| வெற்றி இலக்கம் | 08 21 29 56 |
| சீட்டிழுப்பு வாரம் | 4424 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 05.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 38 |
| வெற்றி இலக்கம் | 07 17 45 66 |
| வெற்றி வாரம் | 1888 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 05.02.2025 |
| தினம் | புதனிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 17 25 69 73 |
| வெற்றி வாரம் | 2538 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 05.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 03 20 28 30 |
| வெற்றி வாரம் | 2101 |

*இராணுவ ஆக்கிரமிப்பால்*

# கிளிநொச்சி. ம.வி. மாணவர்கள் மைதானம் செல்வதில் அவதி!

கிளிநொச்சி, பெப். 6

கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு முன்பாக 50 மீற்றர் தூரத்திலுள்ள மைதானத்துக்குச் செல்லும் பாதை இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளதால் மாணவர்கள் 1 கிலோமீற்றர் வரை நடந்தே சென்று மைதானத்தை அடைகின்றனர் என்று பாடசாலைச் சமூகம் விசனம் தெரிவித்துள்ளது. மாணவர்கள் பாடசாலையின் நிகழ்வுகளுக்கு மைதானத்துக்குச் செல்லவேண்டுமாயின் பாடசாலையின் வீதிக்கு வருகைதந்து அங்கிருந்து ஏ -9 பிரதான வீதி வழியாக மத்திய விளையாட்டு மைதானத்தை ஊடறுத்து கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் மாணவர்கள் மைதானத்துக்குச் சென்று வருவதிலேயே களைப்புற்று சோர்வடைகின்றனர். மைதானத்துக்குச் செல்லும் பாதையை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனரென்பதால் மாணவர்களுக்கு இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து நீண்டகாலமாக பல்வேறு தரப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்தபோதி லும் இதுவரை குறித்த பாதையை இராணுவம் விடுவிக்கவில்லை. எனவே புதிய அரசு இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து மாணவர்களின் நன்மை கருதி குறித்த பாதையை இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பாடசாலைச் சமூகம் கோரியுள்ளது. (நேற்றைய உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியில் ஒரு கிலோமீற்றர் என்பது 100 கிலோ மீற்றர் எனத் தவறாக குறிப்பிடப்பட் டுள்ளது. குறித்த தவறுக்கு வருந்துகிறோம்.) (ச-214)



# நீரிழிவு மருந்துகளுக்காக பெருமளவு நிதிச்செலவு!

கொழும்பு, பெப்.6

இன்சுலின் உட்பட நீரிழிவு நோய்க்கான மருந்துகளை வழங்குவதற்காகக் கடந்த ஆண்டு பெரியளவில் நிதி செலவிடப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

காலி, கராப்பிட்டிய மருத்துவமனையில் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திறைசேரியில் இருந்து வழங்கப்படும் நிதியை அதிகளவில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் பயன்படுத்துவது மட்டும் எமது பொறுப்பல்ல. நோயை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்றும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-25)

# அரிசி இறக்குமதியில் பெரியளவில் மோசடி

## மஹிந்த அமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.6

அரசாங்கத்துக்கும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையில் இருக்கும் ஒப்பந்தம் காரணமாகவே அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை அறிவிக்காதிருக்கின்றது. அதேவேளை, அரிசி இறக்குமதியின்போது பெரும் மோசடி நடந்துள்ளது என்று முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தற்போதுள்ள நிலையில் நான் விவசாய அமைச்சராக இருந்திருந்தால், என்னால் வீட்டில் இருந்திருக்க முடியாமல் போயிருக்கும். பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன போன்றவர்கள் அறுவடை செய்யும் நெல்லை எனது வீட்டுக்கு முன்னால் எரித்திருப்பார்கள்.

பெரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசி மற்றும் நெல்லை மறைத்துவைத்திருக்கிறார்கள். வரலாற்றில் இந்த முறைதான் அரிசி ஆலை உரிமையாளர்கள் பெரியளவில் இலாபமீட்டி இருக்கிறார்கள் என்பதைப் பொறுப்புடன் தெரிவிக்கிறேன்-என்றார். (எ-33)

# இலங்கைப் பிரஜைகளை மீட்க மியான்மருடன் இலங்கை பேச்சு

கொழும்பு,பெப்.6

மியான்மரில் உள்ள மியாவாடியில் கடத்தல் கும்பல்களால் சித்திரவதை மற்றும் துஷ்பிரயோகத்தை எதிர்கொண்டதாகக் கூறப்படும் மீதமுள்ள 18 இலங்கையர்களை உடனடியாக மீட்டுத் திருப்பி அனுப்புவதற்கு மியான்மரின் அவசர ஒத்துழைப்பை அமைச்சர் விஜித ஹேரத் வலியுறுத்தியுள்ளார். இலங்கைப் பிரஜைகளை மீட்பது மற்றும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான முக்கியமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வது குறித்து வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் மியான்மர் துணைப் பிரதமர் உ தான் ஸ்வேவுடன் தொலைபேசியில் உரையாடியபோதே இதனைத் தெரிவித்துள்ளார். (எ-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்துடன் வலுக்கும் முறுகல்

# பரிந்து ரணசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

கொழும்பு,பெப்.6

**சட்டமா அதிபர் பரிந்து ரணசிங்கவிற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குமிடையயே முறுகல் அதிகரித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. சட்டமா அதிபர் பரிந்து ரணசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரும் செயற்பாடுகளிலும் தேசியமக்கள் சக்தி அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.**

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலையுடன் சம்பந்தப்பட்ட பிரதான சந்தேகநபர்களான புலனாய்வுப்பிரிவின் முன்னாள் அதிகாரி பிரேமானந்த உடலகம, பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார ஆகியோரை விடுதலை செய்யவேண்டும் என்று சட்டமா அதிபர் பரிந்து ரணசிங்க மவுண்ட்லேனியா மஜிஸ்திரேட்டுக்கு எழுதிய கடிதம் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு லசந்த விக்கிர மதுங்க கொலையுடன் தொடர்புள்ளது என்று லசந்த விக்கிரமதுங்கவின் சாரதி நீதிமன்றில் தெரிவித்திருந்தார். அதையடுத்து லசந்த விக்கிரமதுங்கவின் சாரதிக்கு கொலை அச்சுறுத்தல் விடப்பட்டிருந்தது. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தேர்தல் பிரசாரத்தின்போது தாங்கள் பதவிக்கு வந்ததும் லசந்த விக்கிரமதுங்க கொலை பற்றி விசாரிப்போம் என உறுதியளித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் பரிந்து ரணசிங்கவின் கடிதம் வெளிவந்துள்ளது.

2020ஆம் ஆண்டு இடம்பெற்ற மகர சிறைக் கைதிகள் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் சட்டமா அதிபர் மீது குற்றச்சாட்டு கள் முன்வைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-33,6)

## நிலுவைக் கட்டணங்களால் நீர்வழங்கல் சபை கடனில்

கொழும்பு, பெப். 6



நிலுவையில் உள்ள நீர்க் கட்டணங்கள் செலுத்தப்படாததால் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கடன் 16 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டுகளில், நாடு முழுவதும் நீர்த்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பெறப்பட்ட கடன்களுக்கு இந்தச் சபை கணிசமான வட்டியைச் செலுத்தவேண்டியுள்ளது என்று நீர்வழங்கல் சபையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். கடனை நிர்வகிக்க, கட்டணங்களைச் செலுத்தத் தவறும் நுகர்வோரின் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்டு வருகின்றது என்று நீர்வழங்கல் சபை தெரிவித்துள்ளது. (எ-25)

## பதவிநிலை அதிகாரிகளின் தலைமை அதிகாரி நியமனம்

கொழும்பு, பெப்.6

மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமரத்ன இலங்கை இராணுவத்தின் பதவி நிலை அதிகாரிகளின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். பெப்ரவரி 9 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் இராணுவத் தளபதியால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-25)

## காற்றின் தரம் உயர்வு

கொழும்பு, பெப்.6

நாட்டில் பெரும்பாலான நகரங்களில் நேற்றுப் புதன்கிழமை நாள் முழுவதும் சற்று ஆரோக்கியமற்ற நிலையில் காற்றின் தரம் காணப்பட்டுள்ளது.

காற்றின் தரக்குறியீடு 85 மற்றும் 128க்கு இடையே பதிவாகும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு மற்றும் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகனப் புகைப்பரிசை நம்பிக்கை நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (எ-33)

## ஏற்றுமதி மேம்பாட்டுக்கு புதிய திட்டம் நடைமுறை

கொழும்பு, பெப்.6

இலங்கையின் ஏற்றுமதித் திறனை மேம்படுத்துவதற்கான திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டுச்சபை என்பன இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன. 'இலங்கை ஏற்றுமதி சிறப்பு முயற்சி 2025' என்ற பெயரில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இலங்கையின் பாரம்பரிய கலாசாரங்கள் மற்றும் உணவுகள் என்பன இந்தத்திட்டத்தினூடாக வெளிப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-25)

## நீர்க்கட்டணம் குறைப்பு; ஆராய குழு நியமனம்

நீர்க் கட்டணத்தை 10 முதல் 30 சதவீதம்வரை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது. மின்சாரக்கட்டணக் குறைப்போடு ஒப்பிட்டு, நீர்க் கட்டணங்களையும் குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது என்றும், இது தொடர்பாக ஆராயக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த குழுவின் அறிக்கை அடுத்த சில நாள்களுக்குள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது என்றும், பின்னர் அது தொடர்பான முன்மொழிவுகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.




தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் எண்ட மாதிரி கையில போன் வைச்சிருக்கிறவையெல்லாம் மீடியாக்காரர் எண்ட நிலைமையாப் போட்டுது. இப்ப வெல்லாம் எந்த நிகழ்வுக்குப் போனாலும் 'நானும் மீடியாதான்' எண்டுகொண்டு மேடையைச் சுத்தி வளைச்சு யூரியூப் கும்பல் நிக்கும். அதுவும் செல்பிஸ்டிக்குகளைத் தூக்கிப் பிடிச்சபடி அவையள் நிக்கிறதால பின்னுக்கு நிக்கிறவைக்கு மேடையில என்ன நடக்குதெண்டே தெரியாமல் இருக்கும். அதைவிட தாங்கள் 'லைவ்' செய்யிறம் எண்டுசொல்லிக்கொண்டு, அந்த மேடையில நடக்கிற நிகழ்ச்சியைக் குழப்பிறமாதிரி தாங்கள் ஏதோ போன் கமெராவைப் பார்த்து ' இப்ப வந்து நாங்கள் எங்க நிக்கிறமெண்டால்...' எண்டு தொடங்கி நீட்டி முழக்கிக் கொண்டிருப்பினம். பாக்கிற சனத்துக்கு கடுப்பா இருக்கும். தங்கட உழைப்புக்காக இப்பிடி நடக்கிற நிகழ்ச்சியையே குழப்பியடிக்கிறாங்களே. இவங்களுக்கு ஆரும் நல்ல பாடம் படிப்பிச்சாத்தான் சரி எண்டு அந்தச் சனங்கள் திட்டித்தீர்க்கிறவை. அவையின்ர சாபமோ என்னவோ இப்ப ஒரு யூரியூப்பரை சுதந்திரதினக் கொண்டாட்டத்தில இருந்து கழுத்தைப் பிடிச்சு வெளியில தள்ளியிருக்கினம். அதுதான் இப்ப பேஸ்புக்கில பேசுபொருளா இருக்குது.

அந்த யூரியூப்காரர் திசைகாட்டி அரசாங்கத்துக்கு கடும் முட்டுக்குடுத்த ஆள். எலக்சன் நேரத்தில திசைகாட்டிக்கு சப்போர்ட்டாத்தான் வீடியோக்கள் விட்டவர். அதாலயோ என்னவோ 'இந்த அரசாங்கத்தையே கொண்டுவந்ததில நானும் ஒருத்தன்' எண்ட மிதப்பு அவருக்கு வந்திட்டுதாம். அந்த மிதப்பிலையோ என்னவோ முந்தநாள் கோல்பேஸில நடந்த சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்குப் போய், ஒரு பெர்மிசனும் எடுக்காமல் 'இப்ப வந்து நாங்கள் எங்க நிக்கிறமெண்டால்...'எண்ட யூரியூப் மந்திரத்தைச் சொல்லி வீடியோ எடுக்க வெளிக்கிட்டிருக்கிறார். ஆனால் சுதந்திரதின நிகழ்ச்சியை 'கவர்' பண்ணுறதுக்கெண்டு அரசாங்கத் தகவல் திணைக்களத்தால முதலே எல்லா மீடியாக்காரருக்கும் கடிதம் அனுப்பி, அதில பதிவு செய்த ஆக்களுக்கு மட்டும் தான் பெர்மிசன் குடுத்து இருந்தவை. ஆனால் இந்த யூரியூப்பரோ அப்பிடி ஒண்டுமே பதியாமல் திறந்த வீட்டுக்குள்ள புகுந்தமாதிரி அங்கபோய் ஆருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் வீடியோ எடுத்தால் பார்த்துக்கொண்டு நிக்கமாட்டினம் தானே. ஆளிட்ட போய் பாதுகாப்பு அதிகாரிமார் 'பெர்மிசன் இருக்கோ?' எண்டு கேட்டிருக்கினம். அவர் ' ஏன் பெர்மிசன்? எதுக்குப் பெர்மிசன்? இதென்ன வடகொரியாவோ?' எண்டு திருப்பிக்கேக்க, அப்பிடியே ஆளின்ர கழுத்தைப் பிடிச்சுக்கொண்டு போய் வெளியில விட்டிட்டினம்.

அதுக்குப் பிறகு அம்பியா இருந்த அந்த யூரிப்பர் அந்நியனா மாறி, 'இந்த அரசாங்கம் என்ர கருத்துச் சுதந்திரத்தை அடக்குது, முடக்குது' எண்டு வீடியோ போட்டுப் புலம்பத் தொடங்கியிருக்கிறார். இந்தத் திசைகாட்டிக்காரர் வரியளைக் கூட்டேக்கயோ, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இப்போதைக்கு நிப்பாட்ட மாட்டம் எண்டு சொல்லேக்கையோ, திஸ்ஸ விகாரையை இடிக்கமாட்டம் எண்டு அறிவிக்கேக்கையோ, அரசியல் கைதியளெண்டு ஆருமே இல்லை எண்டு கையை விரிக்கேக்கையோ வாயைப் பொத்திக்கொண்டு திசைகாட்டிக்கு ஆலவட்டம் பிடிச்சுக்கொண்டிருந்தவர் இந்த யூரியூப்பர். இப்ப தனக்குத் தனக்கெண்ட யூரியூப்பரின்ர சனலும் படக் குப் படக்கெண்டு அடிக்குதாம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்கினால் வெற்றி கிடைக்கும். தாய் வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும் பாதிப்பு இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் இன்றைக்கு வேண்டாம். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். காலையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பிற்பகலுக்கு மேல் கணவன் மனைவிக்கி டையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியிடங் களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வரு வார்கள். எதிர்பாராத செலவுகளால் கை யிருப்புக் கரையக்கூடும். கணவன் மனைவிக்கி டையே சிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டாலும் உடனே சரியாகிவிடும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகர மாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** இன்று புதிய முயற்சி எதிலும் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறு மையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்து ணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயல்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற சற்று அலைய வேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோச னையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணை உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியு டன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக் கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மற்றவர்கள் கோபத்தில் பேசினாலும், நீங்கள் பொறுமையுடன் இருக்கவேண்டியது அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். அலுவலக த்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.



வவுனியா சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை மரநடுகை இடம்பெற்றது. (எ-22,18)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்.மாவட்டச் சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 73ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் இரத்தினராஜா தலைமையில் கல்வியன்காட்டிலுள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணம் தொழில் திணைக்கள ஆணையாளர் நாகேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக ஒன்றியத் தலைவர் ம.அனோஜன், ஒன்றியச் செயலாளர் ஆ.உதயசங்கர், ஒன்றியப் பொருளாளர் பா.சர்மிலன், ஒன்றியப் பிரதித்தலைவரும் முன்னாள் தலைவருமான ந.பிரபாகரன், பத்திரிகையாசிரியரும் எழுத்தாளருமான ச.தேவி பரமலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-41)

## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.6

புலம்பெயர்ந்து கனடாவில் வசித்துவரும் சிவா முருகுப்பிள்ளையின் 'திருகணையும் திருமேனியரும்' நூல் அறிமுக நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பி.ப 4 மணியளவில் இல. 18/02, திருவடிநிழல், அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள "எங்கட புத்தகங்கள்" இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாழ்.மாவட்டத்துக்குரிய செயலாளர் சபா தனுஜனுடைய தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை "நம்மட முற்றம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் வெளியீட்டாளருமான கதிர் திருச்செல்வனும், அறிமுக உரையை ஓய்வுநிலை கிராம சேவை உத்தியோகத்தரும் எழுத்தாளருமான வடகோவை வரதராஜனும், மதிப்பீட்டுரையை வவுனியா, தர்காநகர் கல்வியியற் கல்லூரிகளின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரனும், ஏற்புரையை நூலாசிரியர் சிவா முருகுப்பிள்ளையும் ஆற்றவுள்ளனர். (எ-33)

## மெய்வல்லுநர் திறனாய்வு !

யாழ்ப்பாணம், பெப்.6

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு, வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது .

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமாரன் , சிறப்பு விருந்தினர்களாக கைதடி தெற்கு கிராம உத்தியோகத்தர் ஸ்ரீ.ரூபகானன், சாவகச்சேரி மருத்துவமனையின் மருந்துக்கலவையாளர் இ.சிவதரன், பழைய மாணவனும் பாடசாலை நலன் விரும்பியுமான சு.கிரு ஷ்ணபகவான் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-22,159)

## வடபிராந்திய முயற்சியாண்மைகளை வலுப்படுத்த டேவிட் பீரிஸ் குழுமம் அறிமுகப்படுத்தியுள்ள 'தளிர்'

இலங்கையின் வடபிராந்தியத்தில் முயற்சியாண்மையை ஊக்குவித்து பொருளாதார மேம்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் டேவிட் பீரிஸ் குழுமத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டமே 'தளிர்' ஆகும். புதுமை நிறைந்த, விரிவுபடுத்தக்கூடிய மற்றும் நிலைத்திருக்கக்கூடிய வணிக முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் வாகனத்துறை, சரக்குப்போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, விவசாயம் மற்றும் ஏற்றுமதி ஆகிய துறைகளில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வாகனத்தயாரிப்பு மற்றும் சேவைகள், நிதிச்சேவைகள், சரக்குப்போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகள், மோட்டார்ப் பந்தயம், பொழுதுபோக்கு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல், ரியல் எஸ்டேட், கப்பல்போக்குவரவு, கரையோரச்சேவைகள் மற்றும் சூரிய வலுச்சக்தி போன்ற துறைகளில் கடந்த மூன்று தசாப்தத்திற்கு மேல் 35 கம்பனிகளைக் கொண்டு இயங்கும் டேவிட் பீரிஸ் குழுமம் இந்த 'தளிர்' திட்டத்தை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தியுள்ளது. முயற்சியாண்மைகளின் முன்னேற்றம் மற்றும் பிராந்தியத்தின் நீண்டகால வளர்ச்சி என்பன இத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாக அமைந்துள்ளன. தளிர் என்ற வார்த்தைக்கு உண்மையான அர்த்தத்தை வழங்கும் வகையில் புதிய முயற்சியாண்மைகளை வளரச்செய்வதில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் அர்ப்பணிப்பு இத்திட்டத்தின் ஊடாக அடிக்கோடிட்டுக் காட்டப்படுகின்றது. இத்திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்பும் முயற்சியாண்மைகளிடமிருந்து விண்ணப்பங்களை டேவிட் பீரிஸ் குழுமம் எதிர்பார்க்கின்றது. ஆர்வமுள்ள முயற்சியாளர்கள் வடபிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன், நடைமுறைப்படுத்தப்படக்கூடிய மற்றும் விரிவாக்கப்படக்கூடிய எண்ணக்கருக்களை விவரமாக, செயற்படுத்தக்கூடிய வணிகத் திட்டங்களாக முன்வைக்க வேண்டும். இவ்வாறு முன்வைக்கப்படும் திட்டங்கள் சமூகத்தில் தாக்கம் செலுத்தக்கூடியவையாகவும் வளர்ச்சிக்கான தெளிவான பாதையை வெளிப்படுத்தக்கூடியவையாகவும் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களில் மூன்று ஆரம்ப வணிகங்களுக்கு 500,000 ரூபா வரையான மானியம் வழங்கப்படும். அத்துடன், தெரிவுசெய்யப்பட்ட திட்டங்களுக்கு 10 மில்லியன் ரூபா வரை, பங்கு அடிப்படையிலான ஆதரவு கொடுக்கப்படும். நிதி ரீதியான நன்மைகளுக்கு அப்பால் வணிகம், சந்தைப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் திறன்களை மேம்படுத்தல் முதலான பயிற்சிகளும் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக தொழில்துறையில் நிபுணர்கள் மற்றும் முன்னணி வணிகர்களிடமிருந்து வழிகாட்டுதல்களும் தொழில்துறை நிபுணர்களுடனான தொடர்புகளும் ஏற்படும்.

இதன் ஊடாக தொழில்முயற்சியாளர்கள் எதிர்காலத்தில் தமது பயணத்தை வெற்றிகரமாகத் தொடரமுடியும். வடபிராந்தியத்தின் மேம்பாட்டில் அக்கறை காண்பித்துவரும் டேவிட் பீரிஸ் குழுமம் தொழில்முனைவோரை ஊக்குவித்து எதிர்கால வணிகத்தலைவர்களை உருவாக்கும் நோக்கில் ஆரம்பித்துள்ள தளிர்த்திட்டத்திற்கு நீங்களும் இன்றே விண்ணப்பித்து வாழ்க்கையில் முன்னேறுவதுடன் பிராந்தியத்தின் முன்னேற்றத்திலும் பங்காளர்களாகுங்கள். நீங்கள் விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்திகதி 2025 பெப்ரவரி 10ஆம் திகதியாகும். தளிர்த்திட்டம் குறித்த மேலதிக தகவல்களை http://www.dpg.lk/thalir என்ற இணையத்தளத்தில் பார்வையிடமுடியும். அத்துடன், thalir@dpmco.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக தளிர்த்திட்டத்திற்கு விண்ணப்பிக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஈடுபாடு இல்லாமல் உங்களால் வெற்றிபெறமுடியாது. ஈடுபாட்டுடன் உங்களால் தோல்வியடைய முடியாது.


–அப்துல் கலாம்–

# பயிரை மேயும் வேலி

சும்மாயிருந்த சங்கை ஊதிக்கெடுத்துள்ளார் சட்டமா அதிபர். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகளில் 'லசந்த விக்கிரமதுங்க உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக மீள விசாரித்து உண்மையான குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுத்தல்' என்பதும் முக்கியமானது. இத்தகைய மக்களின் எதிர்பார்ப்பை நிவர்த்திசெய்யும் வகையிலான, நீதியை நிலைநாட்டும் வாக்குறுதிகளே தேசிய மக்கள் சக்தி பற்றிய மக்கள் அபிப்பிராயத்தைப் பெருக்கெடுக்க வைத்து, மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலத்தைப் பெறவும் உதவியது. ஆனால் அந்த அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளைத் தவிடுபொடியாக்கும் வகையில், அவற்றுக்கு எதிர்மாறானவகையில் சட்டமா அதிபர் உத்தரவொன்றை இட்டுள்ளார். சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலையுடன் சம்பந்தப்பட்ட பிரதான சந்தேகநபர்களான புலனாய்வுப்பிரிவின் முன்னாள் அதிகாரி பிரேமானந்த உடலகம, பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் பரிந்து ரணசிங்க, அந்த வழக்கு நடைபெற்றுவரும் நீதிமன்றத்தின் நீதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். இதுவே இப்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இப்போதைய சட்டமா அதிபரான பரிந்து ரணசிங்க, முன்னாள் ஜனாதிபதி ரணிலின் விசுவாசி. ரணில் தன் ஆட்சியின் அந்திமத்திலே '2024 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி' பரிந்து ரணசிங்கவை இலங்கையின் 49 ஆவது சட்டமா அதிபராக நியமித்திருந்தார். இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஏ.பி. ரணசிங்கவின் புதல்வர்தான் இந்தப் பரிந்து ரணசிங்க. பதவிக்கு வந்ததுமே அதிரடியாக இவர் ஒரு உத்தரவை வழங்கி நீதித்துறையினரை அதிர்ச்சியடைய வைத்தார். 2020ஆம் ஆண்டு மகர சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறையின்போது கைதிகளைக் கொன்றனரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட 11 பேரையும் உடனடியாக விடுவிக்குமாறு 2024 ஆம் ஆண்டு பரிந்து ரணசிங்க எழுத்துமூலமாக உத்தரவிட்டிருந்தார். அதனையடுத்து கொலைக்குற்றம் சாட்டப்பட்ட பதினொருபேரும் சுதந்திரப்பறவைகளாகினர். இவர்களை வெளியேவிட்டால், அந்தக் குற்றம் தொடர்பான சாட்சியங்களையும், தடயங்களையும் அழித்துவிடுவார்கள் என சட்டத்தரணிகளும், வெலிசறை நீதிமன்ற நீதிவானும் பகிரங்கமாகக் கருத்துரைத்தபோதும், இறுதியில் சட்டமா அதிபரின் உத்தரவே நடைமுறைப் படுத்தப்பட்டது. இப்போது மீண்டும் அதேபாணியில் சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்ட வழக்கிலும் சந்தேகநபர்களான மூவரையும் விடுவிக்க சட்டமா அதிபர் உத்தரவிட்டு, அடுத்த சர்ச்சைக்கு தூபமிட்டுள்ளார்.

ஆனாலும் இப்போது ஆட்சியில் இருப்பது பரிந்து ரணசிங்கவின் எஜமானர் அல்லவே. அதனால் சட்டமா அதிபரின் உத்தரவு தொடர்பில் தாம் தீவிரமாக ஆலோசித்து வருவதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்துள்ளது. உண்மையில் சட்டமா அதிபரின் இந்த அறிவிப்பு, தேசிய மக்கள் சக்தியினருக்கே தீவிர தலையிடியைக் கொடுத்துள்ளது. ஒருவேளை அப்படியொரு தலையிடியைக் கொடுப்பதற்குத் தான் தனது விசுவாசியான சட்டமா அதிபர் மூலம் இப்படி ஓர் உத்தரவை ரணில் வெளியிடவைத்தாரோ தெரியவில்லை. தாங்கள் ஆட்சியில் இருக்கும்போது, லசந்த கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப் பட்டால், அதன்பின்னர் தங்கள் வாக்குறுதிகள் தொடர்பில் மக்கள் முற்றுமுழுதாக நம்பிக்கை இழந்துவிடுவார்கள் என்றும், இந்த விவகாரத்தை வைத்தே எதிர்க்கட்சிகள் தமக்கெதிரான பிரசாரங்களை முடுக்கிவிட்டால் உள்ளூராட்சித் தேர்தலில் மண்கௌவவேண்டிவந்துவிடலாம் என்றும் அரசாங்கம் அஞ்சுகின்றது. எனவே சட்டமா அதிபருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவது பற்றியும் அரசதரப்பு தீவிரமாக ஆலோசித்து வருகின்றது. அப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் சட்டமா அதிபர் பதவியில் இருந்து பரிந்து ரணசிங்கவைத் தூக்கி எறிந்தால், அதன் மூலம் தாங்கள் நீதிக்காக சட்டமா அதிபரையே பதவி விலக்கியவர்கள் என்று சொல்லி, தங்கள் செல்வாக்கை உயர்த்தமுடியும் எனவும் அரசாங்கம் கணக்குப் போடுகின்றது. பார்ப்போம் யாருடைய கணக்குப் பலிக்கப் போகின்றது என்று.




## நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசு தீர்மானம்

உயர்நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.6**

**நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தில் பல புதிய திருத்தங்களைக் கொண்டுவருவதற்குத் தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.**

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது என்று உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள 4 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மன்றாடியார் நாயக் விராஜ் தயாரத்ன மேற்கண்ட தகவலை நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தினார். (எ-இ)



## பழமையான இயந்திரத்தால் ஜீவனி உற்பத்தி மந்தம்

கொழும்பு, பெப்.6

ஜீவனி உற்பத்திசெய்யும் இயந்திரம் பன்னிரண்டு ஆண்டு பழமை வாய்ந்தது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த இயந்திரத்தின் மூலம் போதியளவு ஜீவனியை உற்பத்திசெய்ய முடியாதுள்ளது என்றும், புதிய இயந்திரம் கொள்வனவுசெய்யப்படவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-22,6)

## இலங்கை அரசுக்கு எதிராக வழக்கு புதுச்சேரி மீனவர்கள் வலியுறுத்து!

சென்னை, பெப்.6

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்காக இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தி தமிழகத்தின், புதுச்சேரி மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். அதேவேளை, தாக்குதல்களில் இருந்து தற்காத்துக்கொள்வதற்காக தங்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

## நாடாளுமன்ற உணவு விலை அதிகரிப்பு நடைமுறை

கொழும்பு, பெப்.6

நாடாளுமன்ற சபைக்குழுவின் முடிவின்படி, நேற்றுமுதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் அன்றாட உணவுக்கு 2 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும். இந்த முடிவு கடந்த முதலாம் திகதி நடைமுறைக்கு வந்தாலும், அதன் பின்னர் முதல்முறையாக நாடாளுமன்றம் கூடியதால், நேற்றுமுதல் இந்த விலை அதிகரிப்பு நடைமுறைக்கு வந்துள்ளது. புதிய விலை நிர்ணயத்தின் கீழ் நாடாளுமன்ற உணவகத்தில் காலை உணவு 600 ரூபாவாகவும், மதிய உணவு ஆயிரத்து 200 ரூபாவாகவும், மாலை தேநீர் 200 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மஹிந்தவை சந்தித்தார் சந்தோஷ் ஜா

கொழும்பு, பெப்.6



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவை கொழும்பு விஜேராம வீதியில் உள்ள மஹிந்தராஜபக்ஷவின் இல்லத்தில் வைத்து நேற்றுச் சந்தித்து உரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பில் பொதுஜனப் பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசமும் இணைந்திருந்தார். (எ-இ)



நாளை
வெள்ளிக்கிழமை - தை - 25
07.01.2025
சுபநேரம் : 06.35 - 08.05
ராகுகாலம் : 11.05 - 12.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சண்டிலிப்பாய் - சீரணி

# திருவருள்மிகு சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

## புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண உத்தமோத்தம த்ரயத்திரும்சத் (33) குண்டபக்ஷ்மஹாயாக பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2025

ஆதியாம் நடவுணன் நையம் பிகையான விஹத
பேதமா முயிர்களோடும் பிரிந்தும் நின்றருள் சுரக்கும்
வேதமோ டாகமங்கள் விதத்திடும் நாகவல்லி
சீதமார் வயல்கள் சூழும் சீரணி உறைகின்றாளே

– சீரணி அந்தாதி

***அம்பிகை அடியார்களே!***

| கர்மாரம்பம் | கும்பாபிஷேகம் | எண்ணெய்க்காப்பு |
|---|---|---|
| தை மாதம் 20 ஆம் நாள் (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை | தை மாதம் 28ஆம் நாள் (10.02.2025) திங்கட்கிழமை | தை மாதம் 26 ஆம் நாள் (08.02.2025)சனிக்கிழமை மு.ப.9.00 மணி தொடக்கம் (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிவரை |

ஸ்ரீமத் இலங்கா துபீபத்தின் வடபாலமைந்த யாழ் நகரின் கண்ணே சண்டிலிப்பாய் சீரணிப் பதியுறை சீரணி ஸ்ரீ நாகபூசணி அமபாள் தேவஸ்தானம் எனப் போற்றப்படும் இத்திவ்விய க்ஷேத்திரத்தில் சிம்மாசனத்தில் உருவத் திருமேனியாக வீற்றிருந்து அருளாட்சி புரியும் அன்னையின் ஆலயம் அடியார்களது ஆதரவுடன் தர்மகர்த்தா சபையினரால் திருப்பணிகள் செய்யப்பட்டு புதுப்பொலிவு படுத்தப்பட்டு நிகழும் குரோதி வருஷம் தை மாதம் 28 ஆம் நாள் (10.02.2025) திங்கட்கிழமை புனர்பூச நட்சத்திரமும் மீனலக்கினமும் சித்தயோகமும் கூடிய காலை 9.35 மணிமுதல் 10.15 மணி வரையுள்ள சுபவேளையில் இராஜகோபுரங்களுக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா வேத ஆகம முறைப்படி சிறப்புற நடைபெற அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது. அன்னையின் அடியவர்கள் அனைவரும் கிரியாகாலங்களில் வருகை தந்து தரிசித்து அம்பாளின் திருவருளைப்பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக.

## கிரியாகால நிகழ்ச்சிகள்

- குரோதி வருடம் தை மாதம் 20 ஆம் நாள் (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 9.36 மணிக்கு கும்பாபிஷேக கிரியைகள் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பம்.
  மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. கிராம சாந்தி அஷ்டபலி. பிரவேசபலி. வாஸ்து சாந்தி. நூதன மூர்த்திகள். தானியாதிவாசம் திருவருட் பிரசாதம் வழங்கல்.
- 03.02.2025 திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு. தூபிஸ்தாபனம். நவக்கிரக ஹோமம் திருவருட் பிரசாதம் வழங்கல்
  மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. திசாஹோமம். ரக்ஷோக்ன ஹோமம் திருவருட் பிரசாதம் வழங்கல்
- 04.02.2025 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு. சாந்திஹோமம். திருவருட் பிரசாதம் வழங்கல்.
  மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. மிருத்யுஞ்ஜய ஹோமம் திருவருட் பிரசாதம் வழங்கல்.
- 05.02.2025 புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு. லக்ஷ்மி ஹோமம். திருவருட் பிரசாதம் வழங்கல்.
  மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. மூர்த்தி ஹோமம். திருவருட் பிரசாதம் வழங்கல்
- 06.02.2025 வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு. சம்ஹிதா ஹோமம். திருவருட் பிரசாதம் வழங்கல்.
  மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. தீபஸ்தாபனம். திருவருட் பிரசாதம் வழங்கல்
- 07.02.2025 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. அம்பிகை நாகபுஷ்கரணி தீர்த்த தடாகத்தில் தீர்த்த சங்கிரகணம். சூர்யாக்னி சங்கிரகணம். மிருத்சங்கிரகணம். தர்மத்துவஜ ஆரோகணம். திருவருட் பிரசாதம் வழங்கல்.
  மாலை 3.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. அங்குரார்ப்பணம். ரக்ஷாபந்தனம். கடஸ்தாபனம் முதலிய கிரியைகள். திருவருட் பிரசாதம் வழங்கல்
- 08.02.2025 சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் விநாயகர் வழிபாடு. தைலாப்பியங்கம். யாகபூஜை. முதலிய கிரியைகள் திருவருட் பிரசாதம் வழங்கல்
  **(08.02.2025) சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். மாலை 4.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. பூதசுத்தி. தர்மத்துவஜ பூஜை. யாக பூஜை முதலிய கிரியைகள் திருவருட் பிரசாதம் வழங்கல்.**
- 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் விநாயகர் வழிபாடு. திரவிய ஹோமம் முதலிய கிரியைகள் திருவருட் பிரசாதம் வழங்கல்.
  மாலை 3.00 மணிக்கு விநாயகர் வழிபாடு. விம்பசுத்தி. ரக்ஷாபந்தன பூஜை முதலிய கிரியைகள் திருவருட் பிரசாதம் வழங்கல்
- 10.02.2025 திங்கட்கிழமை காலை 4.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு. யாக பூஜை. மஹா பூர்ணாகுதி 6.50 மணி முதல் 7.50 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் தூபிக்கலசங்கள் கும்பாபிஷேகம் பிரதான யாக குண்ட பூஜை பூர்ணாகுதி உபசார ஹோமம். மஹா பூர்ணாகுதி. தீபாராதனை. பிரதட்சண வந்தனம். வேத. கீத. ராக. தாள. நிருத்த சமர்ப்பணம். திருமுறை பாராயணம் ஆசீர்வாதம். அந்தர்பலி. பகிர்பலி. தானங்கள். சர்வமங்கல வாத்தியங்களுடன் கும்பங்கள் வீதிப்பிரதட்சனம்.ராஜகோபுர. புனராவர்த்தன வசந்த மண்டப. மணிக்கோபுர கும்பாபிஷேகம். பிரதாக்ன கும்பங்கள் மூலாலய பிரவேசம். ஆவாஹனம் 9.35 மணிமுதல் 10.15 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம்.ஸ்திராகுதி கர்ப்பாவர்ண அபிஷேகம். எஜமான் அபிஷேகம். கோபூஜை. மங்கல தசதர்சனம். திருக்கதவு திறத்தல். ஆசியுரை. சிவாச்சாரியார். கௌரவிப்பு. ஆசீர்வாதம் தொடர்ந்து மஹா அபிஷேக பூஜை. திருவருட் பிரசாதம் வழங்கல். அடியவர்களுக்கு மாகேஸ்வர பூஜை (அன்னதானம் வழங்கல்) மாலை 5.00 மணிக்கு விசேட பூஜைகளுடன் ஆரம்பமாகி வசந்த மண்டப பூஜை நவசக்தி அர்ச்சனை இடம்பெற்று ஸ்ரீ நாகபூசணி அம்பாள் அழகிய பூந்தண்டிகையில் விஷேட மங்களவாத்தியங்கள் சகிதமாக திருவீதி எழுந்தருளி அடியவர்களுக்கு அருங்காட்சி கொடுப்பாள்.

## மஹா கும்பாபிஷேக குருமார் விபரம்

சர்வபோதகாசிரியர்
முத்தமிழ்க்குருமணி
**சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்**
(சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானம்)

தானு மகாதேவக்குருக்கள் குரு ஆசியுடனும், குகானந்தக்குருக்களின் அருளாசியுடனும்
பிரதிஷ்டா பிரதம குரு
சிவாகம கிரியா தத்வநிதி, சிவாகம கிரியா துரந்தரர், கிரியா அலங்காரவாருதி
**சிவஸ்ரீ கா.குகானந்த சோமாஸ்கந்த குருக்கள்**
(தேவஸ்தான பிரதம குரு)

| மங்கள வாத்தியம் | ஒலி அமைப்பு | ஒளி அமைப்பு | மாலை அலங்காரம் |
|---|---|---|---|
| கோபி குழுவினர் - சுதுமலை | செல்வம் சவுண்ட்ஸ் - பண்டத்தரிப்பு | பாலமுருகன் - கோப்பாய் | இ.பரமசாமி குழுவினர் |

இத்தினங்களில் அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து தங்களாலியன்ற பால். தயிர். இளநீர் அபிஷேகப் பொருட்கள். பூ மாலை. புஷ்பம். சமித்து. தீபநெய். கற்பூரம். பழவகைகள். போன்றவற்றைக் கொடுத்து கும்பாபிஷேகவிழாக்களைச் சிறப்பித்து எம் பெருமாட்டியின் பேரருளைப் பெறுவீர்களாக.

*"அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம்"*

சீரணி, சண்டிலிப்பாய்.

தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 11 . 1944



மறைவு 04 . 02 . 2025

### இராமையா சின்னம்மா

வவுனியா அண்ணாநகர் காத்தார் சின்னக்குளத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இராமையா சின்னம்மா அவர்கள் நேற்று முன்தினம் (04.02.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணன்-முத்தாள்அம்மா தம்பதியரின் அன்பு மகளும் இராமையா அவர்களின் அன்பு மனைவியும் இராம்குமார் (வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை). இராம்ராஜ் (J.P, கல்வி சாரா ஊழியர்-சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை) காலஞ்சென்ற கருணாமலர் மற்றும் இராம்தாஸ் (பிரான்ஸ்). கலையரசி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செறின், விஜிதா, பரிமளா, இராஜசுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வினுஜா (கிழக்கு பல்கலைக்கழகம்), டனுஷாந் (தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), டினோத் (லண்டன் பல்கலைக்கழகம்), கிருபாஜினி (ஓமந்தை தொழிநுட்பக் கல்லூரி) ஹரிஸ் (தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ருஷானன் (தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ருஷாலினி (தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), லிசிக்கா (பிரான்ஸ்), டெனிஸ்கா (பிரான்ஸ்), மிதுர்சிக்கா (பிரான்ஸ்), ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 01 . 1930



மறைவு 03 . 02 . 2025

### அப்பாப்பிள்ளை நாகலிங்கம் (பெரியவர்)

(முன்னாள் சிமெந்து தொழிற்சாலை, Heavy Vehicle Operator)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை நாகலிங்கம் அவர்கள் கடந்த (03.02.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, சின்னத்தம்பி, செல்லத்துரை, உடையார் ஆகியோரின் சகோதரரும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் நந்தினி, நந்தகுமார், நந்தசீலன், சரவணபவன், சந்திரகுமார், பாலச்சந்திரன், இராமச்சந்திரன், சிவபாலன், சுகந்தினி, முருகதாசன், சுபாஜினி, ஆகியோரின் தந்தையும் மகேந்திரரட்ணம், வசந்தா, அருள்ராணி, சுதர்ஜினி, கௌரி, சுவந்தி, அருள்மதி, றஞ்சனா, ஞானசேகரம், கவிதா, சசிவரன் ஆகியோரின் மாமனாரும் றஜிதன், றஞ்சிதன்-நிவேக்கா, கஜலக்ஷா, டிலக்ஷா, நிலக்ஷன், வைஸ்ணவி, சாம்பவி, யதுஷன், தக்ஷிகா, தன்ஷிகா, கஜிதன், யஸ்வினி, டக்ஷா, திரிஷா, அக்ஷயா, அஸ்வி, லக்ஷன், கஜிபன், றஜீபன், மகிஷா, லதிகா, லிவிந் ஆகியோரின் பேரனும் சுபிராவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் மாவிட்டபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இராஜ இராஜேஸ்வரி அம்மன் வீதி,**
**மாவிட்டபுரம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**


(CS/2447) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சண்முகலிங்கம் பிரதாப்

(வதனி ஜுவலறி - கொடிகாமம்)



அன்பின் ஒளியாகவும் பண்பின் நண்பனாகவும்
- இருந்து
நட்போடு பழகி உன் கைவண்ணத்தால் வென்றவரே!
உறவுதான் உயிர்மூச்சென்று இருந்தீரே
காலனுக்குப் பொறுக்கவில்லையா ?
- ஏன் இந்த அவசரம்?
தினமும் வாசற்படி பார்க்குதையா எம் கண்கள்
எம்மோடு இருந்த ஒவ்வொரு கணமும்
உயிர் உள்ள வரையில் எம்மால் மறக்கமுடியுமா?
இறைவனுக்கும் ஏன் இந்த அவசரம்?
உன்னை வெகுவிரைவில் அழைத்ததும் ஏனோ.



மண்ணில் 18.08.1985
விண்ணில் 29.01.2023

**பொற்றொழிலாளர் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

என்றும் உங்களின் நினைவுகளுடன்
வாழும்
**குடும்பத்தினர்**

(CS/57427) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு மறுசீரமைப்பு தற்போதைக்கு இல்லை!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கே தற்போது முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. நாடு பொருளாதார உறுதிப்பாட்டை அடைந்த பின்னர்தான் அரசமைப்பு மறுசீரமைப்பு இடம்பெறும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் ஆணையின் பிரகாரம் அரசமைப்பு மறுசீரமைப்பு நிச்சயம் இடம்பெறும். உடனடியாக அதற்குரிய நடவடிக்கை தற்போது இடம்பெறாது. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டரை மாதங்கள் தான் கடந்துள்ளன. பொருளாதார பிரச்சினைதான் எமக்குள்ள பெரும் சவால். எனவே, பொருளாதார உறுதித்தன்மையை ஏற்படுத்த தீவிரமாக செயற்பட்டுவருகின்றோம். அதற்குச் சில காலம் எடுக்கும்.



பொருளாதாரம் ஓரளவு உறுதிப்பாட்டுக்கு வந்தபின்னர், அரசமைப்பு மறுசீரமைப்பு பணி ஆரம்பமாகும். இது விடயத்தில் இழுத்தடிப்பு இடம்பெறாது. மக்கள் கருத்துகளை உள்வாங்க பொறிமுறை உருவாக்கப்படும் - என்றார். (அ-ம-44)

# அநுரவுக்கு எக்காலமும் ஆதரவு வழங்கமாட்டேன்

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுங்கட்சியில் இருந்து எனக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை. அவ்வாறு அழைப்பு வந்தால்கூட இணைவதற்கு நான் தயாரில்லை. இடதுசாரி மூகமூடியை அணிந்துக் கொண்டு லிபரல் வழியில் அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கின்றது. அதனால்தான் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அமெரிக்காகூட அழைப்பு விடுத்துள்ளது -என்றார். (அ-ம-44)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்
ஒரு சதுர அடி - 65 ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க - 90 ரூபாய்.

077 334 1281

(CS/29608) J-1

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் நிதி நிறுவனமொன்றிற்கு (Ltd) வேலையாட்கள் தேவை. A/L படித்த இளைஞர்கள் தொடர்பு கொள்ளலாம். தங்குமிட வசதி வழங்கப்படும்.

தொடர்பு:- 076 337 0335

(CS/57425) J-1

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.
## படவரைஞர்களைப் பதிவு செய்தல்/ புதுப்பித்தல்-2025

2024.12.13 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாக 2025 ஆம் ஆண்டிற்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு கோரப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக NVQ Level 4 in Drafting Technology (Building) கற்கைநெறிக்கான சான்றிதழுடன் NVQ Level 5 in Drafting Technology (Building) கற்கைநெறியினை தற்போது பயின்று கொண்டிருப்பவர்களும் உரிய உறுதிப்படுத்தல் கடிதத்துடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். மேலும் விண்ணப்ப இறுதிக் திகதி 2025.02.28 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

06.02.2025

சீ.சபேசன்.
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

# பெருந்தொகை கஞ்சா உதயபுரத்தில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 6

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட 104 கிலோகிராம் கஞ்சா உதயபுரத்தில் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. உதயபுரம் பகுதியைச் சேர்ந்த மூவர் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 24, 25, 27 வயதுடையவர்கள். சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26)

# மணலாறு பகுதியில் சடலமொன்று மீட்பு!

*யாழ்ப்பாணம், பெப். 6*

*முல்லைத்தீவு மணலாறு பகுதியில் உள்ள வாழைத்தோட்டத்திலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.*

*குறித்த வாழைத் தோட்டத்தில் காவலாளியாகக் கடமைபுரியும் அத்தநாயக்க உதயன்சாலகே பிரியந்த என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)*

## பதவி வெற்றிடம்

மன்னார் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுசங்கங்களின் சமாசம் (வ/து)

மன்னார் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் குறிப்பிடப்படும் எழுதுநர் பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடம் : எழுதுநர் 302/11**

01. பதவி/ சம்பளஅளவுத்திட்டம் - 19280-190x10-210x10-23280
02. தகமைகள் (சுற்றுநிருபம்) - 02/2022

(அ) கூட்டுறவு ஊழியர் 12ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குபதிவாளர்/ லிகிதர்/ கணக்காய்வு எழுதுனர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 13 வது சம்பளத்திட்டத்தில் மேற்படி பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல்/ கணக்குப்பதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 01. கால அனுபவம் /

02. க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

03. வயது 18-45 க்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். தற்போது கூட்டுறவு சங்கத்தில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
04. வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சம்பள சுற்றறிக்கைகளுக்கு அமைவாக சம்பளங்கள் மற்றும் படிகள் வழங்கப்படும்.
05. சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்து பொருத்தமான சான்றிதழ் நிழல் பிரதிகளுடனும் தலைவர். மன்னார் மாவட்ட சி.க.கூ சமாசம் தரவன்கோட்டை வீதி. எழுத்துார். மன்னார் எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 22.02.2025**

**தலைவர்**
**மன்னார் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசம், மன்னார்.**
**தரவன்கோட்டை வீதி. எழுத்தூர் மன்னார்.**

## தைப்பூசம்

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
உலகப் பெருமஞ்சத்திருவிழா



## பால்குடப்பவனி

**காலம்: 11.02.2025 செவ்வாய்க்கிழமை**

- காலை 6.00 மணியளவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும்.
- தைப்பூச தினத்தன்று யாழ்குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து இணுவில் கந்தன் ஆலயத்திற்கு வந்து பெருந்தொகையான பக்தர்கள் பால்குடம் எடுப்பது வழமை.
- பால்.குடம் என்பன ஆலயத்தில் ஒழுங்கு செய்யபட்டுள்ளது ஒரு பால் குட பற்றுச்சீட்டு 400/=.
- இணுவில் கந்தன் ஆலயத்தில் 10.02.2025 திங்கட்கிழமைக்கு முன் தினமும் காலை 9.00-11-00 வரை, மாலை 4.30-6.00 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம்.

## மாபெரும் பொங்கல்

- காலை 9.00 - மாலை 2.00 மணிவரை நடைபெறும்.
- முருகன் அடியவர்கள் அனைவரும் நிகழ்வில் பங்குபற்றி சுவாமியின் இஸ்ட சித்திகளை பெறுவீர்களாக.

**தைப்பூச பெருமஞ்ச கலைபண்பாட்டு மன்றம்**
**இணுவில் கந்தசுவாமி கோயில்**

(CS/29727B) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகங்கள்...

மேலும் தெரிவித்ததாவது:-
ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று சொல்லப்படும் ஊடகத்துறை இந்த நாட்டில் காலத்துக்குக் காலம் நசுக்கப்பட்டுள்ளது. போர்க்காலப்பகுதியில் பல ஊடகவியலாளர்களும், ஊடகப் பணியாளர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். ஊடகவியலாளர்கள் பலர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பல ஊடகவியலாளர்களும் ஊடகப்பணியாளர்களும் இந்த நாட்டில் தமக்கு இருந்த அச்சுறுத்தல் நிலைகளால் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இதனைவிட ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக தராகி சிவராம், மயில்வாகனம் நிமலராஜன், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், ஐயாத்துரை நடேசன், லசந்த விக்கிரமதுங்க போன்ற சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் கடந்த காலத்தில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் உதயன் பத்திரிகை நிறுவனம், சிரச ஊடக வலையமைப்பின் தெபானாம கலையகம் என்பன கடந்த காலங்களில் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி ஹோமாகம நகரில் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். வடக்குக் கிழக்கில் தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி அலையும் உறவுகளைப் போலவே அவரது குடும்பமும், கடந்த ஒன்றரைத் தசாப்தகாலமாக காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி கேட்டு தொடர்ந்து போராடிவருகின்றது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவின் உத்தரவுக்கு அமைவாகவே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டதாக தன்னை முன்னாள் கடற்படை வீரர் என அடையாளப்படுத்தும் ஆர்.பி.டி.பி.பிரசன்ன பியசாந்த என்பவர் அண்மையில் வெளிப்படுத்தியிருந்தார். இந்த விடயம் ஆராயப்படவேண்டும்.

தற்போதும் ஊடகவியலாளர்கள் மீது பொலிஸார், புலனாய்வாளர்கள், இராணுவத்தினர் எந்நேரமும் கண்காணிப்பைச் செலுத்திக்கொண்டிருக்கின்றனர். இப்போதும்கூட ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர், தாக்கப்படுகின்றனர். எனவே இந்த அரசாங்கம் ஊடக அடக்குமுறைக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (அ-ம-26)

## யாழ். ரயில்...

தார். தபால்சேவை ரயில்கள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆதலால், பயணிகளின் அசௌகரியங்களை தவிர்க்கும் விதமாகவும், பயணிகளின் நலனைக் கருத்திற்கொண்டும் ஆசன முற்பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் ரயில் நிலைய அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-ம-125)

## பெப்ரவரி...

இதன்படி, காலை 5:30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுகின்ற ரயில் மதியம் 1:15 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடையவுள்ளது. கொழும்பிலிருந்து காலை 11.50 மணியளவில் பயணிக்க ஆரம்பிக்கும் ரயில் மாலை 6:50 மணியளவில் வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஏனைய சேவைகள்**

கடந்த 31ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்ட இரவு நேர தபால் சேவையானது காங்கேசன்துறையிலிருந்து இரவு 8 மணிக்கு பயணத்தை ஆரம்பித்து, அதிகாலை 4.20 மணியளவில் கொழும்பு கோட்டையைச் சென்றடையும். கொழும்பு கோட்டையில் இருந்து இரவு 8 மணியளவில் பயணத்தை ஆரம்பிக்கும் ரயில் யாழ்ப்பாணத்தை அதிகாலை 3.55 மணிக்கு வந்தடையும்.

இதேவேளை ஏற்கனவே இடம்பெற்று வருகின்ற யாழ். தேவி ரயில்சேவையானது காலை 5:45 மணியளவில் கொழும்பு கோட்டையிலிருந்து சேவையினை ஆரம்பித்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை 12:20 மணியளவிலும், காங்கேசன்துறையை 1.45 மணியளவிலும் வந்தடையும்.

காங்கேசன்துறையிலிருந்து இரவு 10:30 மணியளவில் சேவையை ஆரம்பிக்கும் யாழ் தேவி ரயில் சேவையானது யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை இரவு 11 மணியளவில் அடைந்து தொடர்ந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை காலை 7 மணியளவில் சென்றடையும்.

வழமைபோல யாழ்ராணி ரயில் சேவையானது காலை 6 மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து சேவைகளை ஆரம்பித்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை காலை 6:35 மணியளவில் அடைந்து தொடர்ந்து அனுராதபுரத்தினை 10:30 இற்கு சென்றடையும் இதேவேளை அநுராதபுரத்திலிருந்து மாலை 2:30 மணிக்கு சேவைகள் ஆரம்பமாகி யாழ் ரயில் நிலையத்தினை மாலை 6:10 மணியளவில் அடைந்து காங்கேசன்துறைக்கு மாலை 6:50 மணிக்குச் சென்றடையும்.

மேலும் விசேட சேவையாக சனி மற்றும் ஞாயிறு தினங்களில் கடுகதி ரயில் சேவை கொழும்பு கோட்டையிலிருந்து காலை 5:30 மணிக்கு ஆரம்பித்து யாழ்ப்பாணத்தை காலை 11:50 மணியளவில் வந்தடையும். மேலும் யாழிலிருந்து மாலை 2:15 மணிக்கு ஆரம்பமாகி கொழும்பை இரவு 8:50 இற்கும் சென்றடையும். (அ-ம-125)

## டெங்கின்...

யாழ்ப்பாணத்தில் கடந்த 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் டெங்கின் தாக்கம் 10 மடங்கால் குறைவடைந்துள்ளது என்று யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டனர். ஆனால், இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 246ஆகக் காணப்படுகின்றது. எனவே, டெங்குத் தொற்றின் எண்ணிக்கை இந்த வருடம் 10 மடங்கால் குறைவடைந்துள்ளது - என்றார். (அ-ம-125

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



தோற்றம் : 24.01.1966 மறைவு : 08.01.2025

**அமரர் சின்னத்தம்பி தவராசா**

(உரிமையாளர்- ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மரத்தளபாடம், சாவகச்சேரி)

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.12 கண்டி வீதி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் நேரிலும், தொலைபேசியூடாகவும் எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், அதிபர், ஆசிரியர்கள், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (07.02.2025) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.12 கண்டி வீதி,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 24 . 05 . 1951



விண்ணில் 29 . 01 . 2023

அமரர் திருமதி சபா புஷ்பநாதன் சறோஜினிதேவி

(பங்காளர், துர்க்கா பொத்தகச் சோலை, சுன்னாகம்)

திதி : பூர்வபட்ச நவமி

நேற்று எங்கள் அன்னையாய்
இன்று எம் அருளினியாய்
என்றும் எமது இறைவியாய்-வாழும்
எமது அன்புத் தெய்வத்தை
நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

'தேவி வாசா'
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
[illegible]

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,மருமக்கள்
மற்றும் சகோதரர்கள், உறவினர்கள்.
076 749 0219

(CR/442621 J.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொஹிங்ய பெண் சிசு பிரசவிப்பு!

முல்லைத்தீவு, பெப். 6
முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தளத்தில் தங்க வைக்கபட்டிருந்த றொஹிங்யப் பெண்ணொருவர் சிசு வொன்றைப் பிரசவித்துள்ளார்.

அத்துடன் 47 வயதுடைய ஆண் ஒருவர் திடீர் சுகவீனமுற்று மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம125)


## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி

### உலர் உணவுகள் பெறுகைகள் - 2025

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ஆ. அத்துடன், மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 06.02.2025 ஆந் திகதி முதல் 18.02.2025ஆந் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. 13.02.2025 ஆந் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைமுறைகள் தொடர்பான முன் கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
8. கேள்விகள் யாவும் 19.02.2025 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாக தலைவர் , கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாக நிதிக்கிளை பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 19.02.2025 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) ஒவ்வொரு பெறுகைக்கும் தனித் தனியாக செலுத்தப்படல் வேண்டும்.
10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| இல | விபரங்கள் | குறியீட்டு இலக்கம் | பெறுகைப் பிணைத் தொகை | பெறுகைப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | ஆதார வைத்தியசாலை முழங்காவில் | NP/04/45/RDHS/DF/Mu/ 2025/1 | ரூபா.70,000.00 | 17.05.2025 | ரூபா.3000.00 |
| 02 | பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம் | NP/04/45/RDHS/CF/Ak/ 2025/2 | ரூபா.60,000.00 | 17.05.2025 | ரூபா.3000.00 |
| 03 | பிரதேச வைத்தியசாலை பூநகரி. | NP/04/45/RDHS/CF/Po/ 2025/3 | ரூபா.60,000.00 | 17.05.2025 | ரூபா.3000.00 |
| 04 | பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | NP/04/45/RDHS/CF/Th/ 2025/4 | ரூபா.60,000.00 | 17.05.2025 | ரூபா.3000.00 |
| 05 | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம். | NP/04/45/RDHS/CF/Ur/ 2025/5 | ரூபா.50,000.00 | 17.05.2025 | ரூபா.2500.00 |
| 06 | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | NP/04/45/RDHS/CF/Va/ 2025/6 | ரூபா.50,000.00 | 17.05.2025 | ரூபா.2500.00 |
| 07 | பிரதேச வைத்தியசாலை வேரவில். | NP/04/45/RDHS/CF/Ve/ 2025/7 | ரூபா.50,000.00 | 17.05.2025 | ரூபா.2500.00 |
| 08 | பிரதேச வைத்தியசாலை பளை | NP/04/45/RDHS/CF/Pa/2025/8 | ரூபா.50,000.00 | 17.05.2025 | ரூபா.2500.00 |


தலைவர்.
பிராந்திய பெறுகைக் குழு.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை.
கிளிநொச்சி.
TP- 0212285719, Fax- 0212285931
E.mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com

(CB444261) J-1


இந்தியாவிலிருந்து

# புறாக்கள், கிளிகள் இலங்கைக்குள் கடத்தல்

*லட்சக் கணக்கான பெறுமதியுடையவை*



இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குள் சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்ட பறவைகள், விலங்குகள் மற்றும் மருந்துகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மன்னார், பேசாலை பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தேடுதலின்போதே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. புறாக்கள், ஆபிரிக்கக் கிளிகள், பறக்கும் அணிகள் மற்றும் மருந்துகள் என்பன இதன்போது மீட்கப்பட்டுள்ளன.
கடத்தி வரப்பட்ட விலங்குகள், பறவைகள் மற்றும் மருந்துகளை வாகனமொன்றில் ஏற்றிக்கொண்டு சென்றபோதே அந்த லொறி இடைமறிக்கப்பட்டு கடத்தல் முறியடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பல்லாயிரம் ரூபா பெறுமதியான விலங்குகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. (ம-56)

## அர்ச்சுனா...

உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, அநுராதபுரம் பொலிஸாரால் தான் கைது செய்யப்பட்ட விவகாரத்தை மையப்படுத்தி சிறப்புரிமைப் பிரச்சினையை முன்வைத்தார்.
அர்ச்சுனா எம்.பி. இவ்விடயத்தை தமிழில் குறிப்பிட்டுக்கொண்டிருக்கையில், 'சிறப்புரிமை பிரச்சினையை ஆங்கில மொழிமூலம் சமர்ப்பித்துள்ளீர்கள், அதில் உள்ள விடயங்களை மாத்திரம் குறிப்பிடுங்கள்' என்று சபாநாயகர் குறிப்பிட்டிருந்தார். கடிதத்தில் உள்ள விடயங்களைத்தான் குறிப்பிடுகின்றேன் என சுட்டிக்காட்டி, ஆங்கில மொழியில் அதனை வாசித்தார் அர்ச்சுனா எம்.பி. அத்துடன், நாடாளுமன்ற முகாமைத்துவம் மற்றும் சபாநாயகர் மீதும் விமர்சனங்களை முன்வைத்தார். தனக்கு உரையாற்ற வாய்ப்பளிக்காமை தொடர்பிலும் கருத்து வெளியிட்டிருந்தார். இதையடுத்து, கடிதத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கு அப்பால் உள்ள விடயங்களை ஹன்சார்ட்டில் இருந்து நீக்குமாறு சபாநாயகர் கட்டளையிட்டார்.
இதன்போது ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர,
'இவரின் (அர்ச்சுனா) நடத்தை தொடர்பில் எமக்குப் பிரச்சினைகள் உள்ளன. ஒருபுறத்தில் இவர் உங்களை நோக்கி (சபாநாயகரை) வெட்கம் எனக் குறிப்பிடுகின்றார். மறுபுறத்தில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான விடயம் என்றும் குறிப்பிடுகின்றார். இங்கே சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் கிடையாது. சிறுபான்மையினம் என்று நாங்கள் எவரையும் கதைப்பதில்லை. இவ்வாறான கருத்துக்களுக்கும், செயற்பாடுகளுக்கும் சபையில் இடமளிக்க வேண்டாம். இவர் மனநலம் பாதிக்கப்பட்டவர். இவரை மனநல மருத்துவரிடம் அனுப்புங்கள்.' என்று தெரிவித்தார். இதையடுத்து, 'மூளை குழம்பிய தயாசிறி மட்டுமல்ல, அவரால் மூளை குழப்பப்பட்டுள்ளவர்களும் நான் கதைக்கும்போது உரையாடுகின்றனர். அவர்கள் இவ்வாறு எனது நேரத்தை எடுத்துக்கொண்டால் நான் எங்குபோய் எனது கருத்தை முன்வைப்பது?' என்று அர்ச்சுனா எம்.பி. அங்கலாய்த்தார். (அ-ம-44)

## சட்டமா...

பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2006ஆம் ஆண்டுக்கு பிறகு தெற்கில் மட்டுமல்ல வடக்கிலும் ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்டமை, கடத்தப்பட்டமை ஆகிய சம்பவங்கள் தொடர்பில் முறையாக விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதற்குரிய மக்கள் ஆணை எமக்கு உள்ளது. மக்கள் வழங்கிய ஆணை தொடர்பில் எமக்கு சிறந்த புரிந்துணர்வு உள்ளது.
எனவே, லசந்த கொலைவழக்குத் தொடர் பான சட்டமா அதிபரின் ஆலோசனை தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்துவருகின்றது. இது தொடர்பில் எமது நிலைப்பாடு விரைவில் அறிவிக்கப்படும். எந்தவொரு குற்றவாளியையும் தப்பிப்பதற்கு இடமளிப்பது எமது நோக்கம் அல்ல. மக்கள் ஆணையை ஒருபோதும் மீற மாட்டோம் - என்றார். (அ-ம-44)

(இன்னொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டிக்...

அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தால் டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:- யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் விகாரையின் நிலத்தைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் விகாரைக்குப் பொறுப்பான தேரர் மற்றும் விகாரையின் நிர்வாக சபையினருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. திஸ்ஸவிகாரை நிலத்தின் எந்தவொரு பகுதியும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு அமைவாக பொதுமக்களுக்கு வழங்கமுடியாது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள 7 ஏக்கர் 3 றூட் 9.97 பேர்ச் உட்பட 14 ஏக்கர் 5097 பேர்ச் காணி, விகாரைக்கே சொந்தமானது. அந்தக் காணியை விகாரையிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக விகாரைக்குச் சொந்தமான நிலத்தின் எந்தவொரு பகுதியையும் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு சந்தர்ப்பம் இல்லை.

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவை. அரசியலமைப்பின் 9ஆவது பிரிவின்படி பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்பதாலும், பௌத்த மதத்தை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளதாலும் காணியை விகாரைக்குக் கையளிக்க எந்தத் தடையும் இல்லை.

விகாரைக்குரிய காணியில் பௌத்த சமயத்தின் முன்னேற்றத்துக்காக சைத்யம், புத்த மெதுரா, போதி, ஆவாச மனை, அன்னதான மடம் மற்றும் மடாலயம் ஆகியவற்றைக் கொண்ட பூங்கா தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்குப் புனித யாத்திரை செல்லும் பௌத்த பத்தர்களுக்காக ஓய்வு மண்டப வசதிகள், அன்னதான மண்டபம், தியான மண்டபங்கள், தர்ம பாடசாலை கட்டடங்கள் என்பன நிர்மாணிக்கப்படுவதும் அவசியம். நில அளவைத் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்டுள்ள 14 ஏக்கர் 5097 பேர்ச் காணியை மீள விகாரையிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கடந்த 31ஆம் திகதி நடைபெற்றது. யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அந்தக் கூட்டத்தில் தையிட்டியில் பொதுமக்களின் காணிகளில் எவ்வித அனுமதியும் பெறாது அமைக்கப்பட்டிருக்கும் விகாரை தொடர்பாகப் பிரஸ்தாபித்தார். யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானம், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானம் என்பற்றை மீறி எந்தவித அனுமதியும் பெறாது பொதுமக்களின் காணிகளில் அமைக்கப்பட்டிருக்கும் விகாரை தொடர்பாக அவர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார்.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்திருந்த வடக்கு மாகாண ஆளுநர், விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது என்றும், மாற்றுக்காணிகளைப் பெற்றுக்கொள்ள காணிகளின் உரிமையாளர்கள் உடன்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்திருந்தார். காணிகளின் உரிமையாளர்கள் மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொள்ள உடன்படவில்லை என்று அந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியிருந்தார். ஆயினும் இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தக் கடிதம் தொடர்பாக எந்தக் கருத்தும் முன்வைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-எ-26)

## பலம்பெறும்...

கிடையில் நேற்று விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலைமையில் நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த்தேசியக் கட்சிகளின் உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

சமகால மற்றும் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்துக்குள்ளும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் கூட்டாக இணைந்து செயற்படுவது தொடர்பாக எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதே இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கம் என்று எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் எம்.பிக்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ-ம-44)

## யாழ்ப்பாணப்...

வரையான தேர்வுகளில் சித்தியடைந்து 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்களை இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி வரை தமது வேண்டுகோள்களைச் சமர்ப்பிக்குமாறும், மேலதிக விவரங்களுக்குப் பல்கலைக்கழக இணையத்தளமான Jaffna. Jfn.ac.lk இனைப் பார்வையிடுமாறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-ம-66)

## சிறுமியொருவர்...

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

உடல்நிலை பாதிப்படைந்த 15 வயதேயான சிறுமியொருவர் முல்லைத்தீவு மருத்துவமனைக்கு நேற்றுச் சிகிச்சைக்காகச் சென்றுள்ளார். இதன்போதே, அந்தச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்தது. அது தொடர்பில் மருத்துவமனை வட்டாரத்தால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-125)

## அநுரவின்...

அங்கு பலமாக உள்ளனர். எனவே, அங்கிருந்துவரும் தகவலுக்கமைய இங்கு தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கப்படலாம்.

அந்தச் சக்திகளை (புலம்பெயர்) திருப்திப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதை காணமுடிகின்றது. இராணுவ முகாம்கள் அகற்றப்படுகின்றன. மைத்திரி - ரணிலின் ஆட்சிக் காலத்திலும் முகாம்கள் அகற்றப்பட்டன. அத்தியாவசியமானவை எனக் கருதி வைக்கப்பட்டிருந்த படைமுகாம்கள்தான் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

மஹிந்த ராஜபக்சவை வீட்டில் இருந்து வெளியேற்ற முற்படுகின்றமை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கோத்தாபய ராஜபக்சவை கைதுசெய்ய முற்படுகின்றமை உட்பட பல நடவடிக்கைகள் இவ்வாறு புலம்பெயரிகளைத் திருப்திப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுவருகின்றன.

அநுரகுமார இன்று சுதந்திரமாக யாழ்ப்பாணம் செல்வதற்குக்கூட, போரை முடிப்பதற்கு மஹிந்த ராஜபக்ச வழங்கிய அரசியல் தலைமைத்துவம்தான் காரணமாகும் என்பதை மறக்கக்கூடாது - என்றார். (அ-ம-44)

## மணல்...

பட்டுள்ளது. நாயன்மார்கட்டுப் பகுதியில் வைத்து அந்த உழவியந்திரத்தை மறித்த போதிலும், அது நிற்காமல் சென்றுள்ளது. இதையடுத்தே, பொலிஸார் அந்த உழவியந்திரத்தை விரட்டிச் சென்று இருபாலைப் பகுதியில் வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தி மடக்கிப் பிடித்துள்ளனர். உழவியந்திரத்தின் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-26)

**வேலையாட்கள் தேவை**


யாழ் சுண்டுக்குளிக்கு அருகாமையில் இயங்கி வரும் நிறுவனம் (Hotel) ஒன்றிற்கு பணிபுரிவதற்கு பராமரிப்பாளர் தேவை.
கணவன் மனைவியாக இருப்பவர்கள் விரும்பத்தக்கது. தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும்.

**077 608 2371**

(CS/57424) J-1

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 14 • 06 • 1964



இறப்பு 10 • 01 • 2025

கடந்த 10.01.2025 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்)**

(SKAT கேபிள் விஷன் - கட்டப்பிராய், வரதன் எலக்ரோனிக்ஸ் மற்றும் சரண்ஜா தொலைத்தொடர்பு நிலையம், கஸ்தூரியார் வீதி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07.02.2025) வெள்ளிக்கிழமை காலை 8:00 மணியளவில் மண்கும்பான் சாட்டி வெள்ளைக் கடற்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற உள்ளது இதனையொட்டி அன்றயதினம் நண்பகல் 12.30 மணியளவில் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் (நீராவியடி ) நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் எமைப்பிரிந்த வேளையிலே அவரது மறைவுச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்தவர்களுக்கும். இறுதி நிகழ்வில் மலர் வளையம் சாத்தியவர்களுக்கும். துண்டுப்பிரசுரங்கள். பதாகைகள் மூலம் தங்கள் இரங்கலை தெரிவித்தவர்கள். இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள். அன்னாரின் ஆன்ம ஈடேற்றதிற்காக பிரார்த்தித்தவர்கள். உடன் இருந்து சகல வழிகளிலும் உதவிகளை வழங்கிய.வழங்கிக் கொண்டிருக்கின்ற உறவினர்கள். நண்பர்கள் என அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

"கைலை வாசம்"
இல 66, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
076 732 0241, 076 260 5226

(CS/57428) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக வர்த்தகம்!

### யாழில் பொலிஸார் எச்சரிக்கை

யாழ்.நகரில் வர்த்தக நிலையங்களுக்கு வெளியில் பொருள்களைக் காட்சிப்படுத்தியிருந்த வர்த்தகர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸாரால் எச்சரிக்கைத் துண்டுகள் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பிலும் வர்த்தகர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டன. 'தூய இலங்கை' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜயசிங்க, யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயமஹா மற்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ச-22,66)

**காணி விற்பனைக்கு உண்டு**

உப்பள வீதி, பெரிய கடை, மன்னார்.
13 பேர்ச் காணி விற்பனைக்கு.
மிகுதி விபரங்களை அறிய

தொடர்புகளுக்கு: 075 233 2992
074 007 8791

**வாகன சாரதி தேவை**

கன்டர் ரக வாகனம் (350) ஓட்டுவதற்கு AD அனுமதிப் பத்திரம் உள்ள சாரதி தேவை.

இடம்: யாழ்நகர்

தொடர்புகளுக்கு:
**076 821 9414**

## திருப்புகழ் முற்றோதல்

விடத்தற்பளை வயலூர் அலங்கார கந்தசுவாமிகோவில் ஆலயத்தின் திருப்புகழ் முற்றோதல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 11 ஆம் திகதி தைப்பூச தினத்தன்று நிறைவுபெறும்.

அனைத்து முருகன் பக்தர்களையும் வழிபாடுகளில் பங்கேற்று கந்தனருள் பெற்றுய்யுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (எ–25)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பலாலி றோட் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300m
- பலாலி-புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல் வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

(CS/2450) J-1

தொடர்பு: 077 623 4204
076 755 8606

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1944



மறைவு 03 . 02 . 2025

### கமலாதேவி இராஜசுந்தரம்

(கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியரும் பழைய மாண்வியும்)

அச்சுக்கூட ஒழுங்கை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மாதகலை வாழ்விடமாகவும் தற்போது குளப்பிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி இராஜசுந்தரம் அவர்கள் கடந்த (03.02.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன்- இரத்தினம்மா (சந்திரா) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராஜசுந்தரம் (முன்னாள் பொது முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் Dr.முரளீதரனின் அன்புத் தாயாரும் Dr.அபிராமி அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இரவிச்சந்திரன் , இரவிசேகரன் மற்றும் குகசாந்தி ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற சிறினிவாசன், நேசரத்தினம், இரதிதேவி மற்றும் திருமகள், பாஸ்கரன், தேவகி, இராகுலன், சுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பூதத்தம்பி (நீர்வேலி வடக்கு), பத்மநாதன் (சம்பியன் வீதி), தவரத்தினம், கனகா, திலகநாதன், கோசலை, விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆதிரா, அர்ஜுன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2025) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

34, குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில்.

தகவல்:
இ.முரளீதரன் (மகன்)
ப.பகீரதன் (பேறாமகன்)
077 767 8763, 077 786 0076

(CS/57421) J-1

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 31.01.2023 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர்
### திருமதி நகுலாம்பிகை சச்சிதானந்தமூர்த்தி
(நகுலா)



அவர்களின் ஆண்டுத் திவசம் (திதி) நாளை (07.02.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மூர் வீதி,
மன்னார்.

குடும்பத்தினர்
076 179 8822

(CS/57422) J-1

பிறப்பு 24.09.1960 இறப்பு 31.01.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.